**<u>மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் ( சார்பு நீதிமன்றம்), பொள்ளாச்சி</u>**

**முன்னிலை திரு. M. மணிகண்டன், M.A., M.L., PG.D.C.F.Sc,**
**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழக்கிழமை
(2056 திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 28 ம் நாள்)

**<u>மோ.வா.வி.கோ.மனு எண். 69/2021</u>**
**<u>CNR No. TNCB - 11000573 - 2021</u>**

ராஜேஸ்வரி, க/பெ. காளிமுத்து, வயது 39, வசிப்பிட முகவரி கதவு எண்.2/47, அய்யம்பாளையம் கிராமம், ஜமீன் முத்தூர் அஞ்சல், பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம் – 642 005.

...மனுதாரர்

**/எதிர்/**

1. சித்தார்த், த/பெ. ராஜசேகரன், வசிப்பிட முகவரி மெயின் ரோடு, குப்புச்செட்டி சாவடி, பூவம், காரைக்கால்.

2. முருகேசன், த/பெ. வீரப்ப வேளாளர், வசிப்பிட முகவரி 243, ஏழாவது தெரு, அருளானந்த நகர், தஞ்சாவூர்.

3. M/s. யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிட், அலுவலக முகவரி 178, டாக்டர்.நஞ்சப்பா ரோடு, சிதம்பரம் பார்க் எதிர்புறம், கோயமுத்தூர் –18.

4. M/s. ராயல் சுந்தரம் ஜெனரல் இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிட், அலுவலக முகவரி 141, 142 சிவ சுப்பிரமணியம் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்.

...எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது கடந்த 06.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.M.C.பழனிச்சாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 2 ம் எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.C.மதன் மோகன், எம்.ஏ.,

பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.சுந்தரராஜ், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.V.மதிசேகர், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் என்னால் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் எனது சீரிய ஆய்விற்கு உட்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரும்,

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகை ரூ.40,00,000/-த்தை மனு தாக்கல் செய்த 05.03.2021ம் தேதி முதல் தொகை செலுத்தும் வரை 12% பின்வட்டியுடன் எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், இம்மனு செலவு தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சாராம்சம் :**

**2.1)** கடந்த 16.09.2020ம் தேதியன்று மாலை சுமார் 03.30 மணியளவில் மனுதாரரும், அவரது கணவரும், குடும்ப நண்பரான சந்திரமொளி என்பவரும் சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைகழகத்தில் Phd படிப்பிற்காக ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக மனுதாரரின் கணவருக்கு சொந்தமான TN 41 AE 3912 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுக்கி காரில் கடலூரில் இருந்து சிதம்பரத்தின் புறவெளிச்சாலையில் வடக்கில் இருந்து தெற்காக தில்லைநாயகபுரம் பேருந்து நிறுத்தம் அருகே சென்று கொண்டிருந்தபோது எதிர்திசையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி TN 49 BL 1314 என்ற பதிவெண் கொண்ட வோல்ஷ்வேகன் காரை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் சென்ற காரின் மீது மோதியதில் மனுதாரருக்கு தலை, முகம், தோள்பட்டை, கை, வலது கால், இடுப்பு பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டு ராஜா முத்தையா மெடிக்கல் காலேஜ் மருத்துவமனையில்

முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையில் மேல்சிகிச்சை அளிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

2.2) மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரே காரணம் என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் காயங்களுக்காகவும், நிரந்தர ஊனத்திற்காகவும், வருமான இழப்பிற்காகவும், மன உளைச்சலுக்காகவும், துணி மற்றும் பொருள் இழப்பிற்காகவும், போக்குவரத்து செலவிற்காகவும், ஊட்டச்சத்துக்காகவும் இழப்பீடாக ரூ.40,00,000/– கோரப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.3) 1ம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TTN 49 BL 1314 என்ற பதிவெண் கொண்ட வோல்ஷ்வேகன் காரின் ஓட்டுனர் என்றும், 2ம் எதிர்மனுதாரர் TN 49 BL 1314 என்ற பதிவெண் கொண்ட வோல்ஷ்வேகன் காரின் உரிமையாளர் என்றும், 3ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் காப்பீட்டாளர் என்றும், 4ம் எதிர்மனுதாரர், மனுதாரர் சென்ற காரின் காப்பீட்டாளர் என்றும், எனவே எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க பொறுப்புடையவர்கள் என்றும் இம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

**3.** 1ம் எதிர்மனுதாரர் தோன்றாரப்பினராக வைக்கப்பட்டு அவ்வாறே இருந்து வருகிறார்.

4. **<u>2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சாராம்சம் :–</u>**

மனுவானது பொய்யானது என்றும், சட்டப்படி ஒத்துக்கொண்ட பொருண்மைகளை தவிர இதர பொருண்மைகளை மனுதாரர் தான் மெய்பிக்க வேண்டும் என்றும், மனுதாரரின் வயது, வேலை மற்றும் தொழிலைப் பொறுத்து மனுதாரர் தான் நிரூபணம் செய்யவேண்டும் என்றும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீடானது எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது என்றும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகமாக உள்ளது என்றும், மனுதாரருக்கு தற்காலிக அல்லது

நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றும், எனவே மனுதாரர் இழப்பீடு பெற தகுதியற்றவர் என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவினை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

5. <u>3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சாராம்சம் :–</u>

மனுவானது பொய்யானது என்றும், சட்டப்படி ஒத்துக்கொண்ட பொருண்மைகளை தவிர இதர பொருண்மைகளை மனுதாரர் தான் மெய்பிக்க வேண்டும் என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதை மனுதாரர் தான் நிரூபணம் செய்யவேண்டும் என்றும், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், எனவே 3ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றும், விபத்து சமயத்தில் மனுதாரர் சென்ற வாகனத்திற்கு உரிய காப்பீடு இருந்தது என்பதை ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீடானது மிகவும் அதிகமாக உள்ளது என்றம், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், எனவே 3ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவினை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

6. <u>4ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சாராம்சம் :–</u>

மனுவானது பொய்யானது என்றும், சட்டப்படி ஒத்துக்கொண்ட பொருண்மைகளை தவிர இதர பொருண்மைகளை மனுதாரர் தான் மெய்பிக்க வேண்டும் என்றும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீடானது மிகவும் அதிகமாக உள்ளது என்றும், மனுதாரர் எவ்வித ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே 4ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீட்டுத்தொகையையும் செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றும், 4ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றும், மனுதாரர் 6%

பின்வட்டி மட்டுமே பெற தகுதியுடையவர் என்றும், எனவே 4ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவினை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

**7. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,</u>**

1. இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், அதிவேகத்தாலும் மற்றும் கவனக்குறைவாலும் ஏற்பட்டதா ?

2. மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டவர்களா? ஆம் என்றால் எவ்வளவு ?

3. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன ?

**8.** இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19, வரையிலான சான்றாவணங்களும், நீ.ம.சா.ஆ.1 சான்றாவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**9. <u>பிரச்சினை 1–க்கான தீர்வு :–</u>**

9.1) இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் ம.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது கடந்த 16.09.2020ம் தேதியன்று மாலை சுமார் 03.30 மணியளவில் மனுதாரரும், அவரது கணவரும், குடும்ப நண்பரான சந்திரமொளி என்பவரும் சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைகழகத்தில் Phd படிப்பிற்காக ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக மனுதாரரின் கணவருக்கு சொந்தமான TN 41 AE 3912 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுசுக்கி காரில் கடலூரில் இருந்து சிதம்பரத்தின் புறவெளிச்சாலையில் வடக்கில் இருந்து தெற்காக தில்லைநாயகபுரம் பேருந்து நிறுத்தம் அருகே சென்று கொண்டிருந்தபோது எதிர்திசையில் தெற்கில் இருந்து

வடக்கு நோக்கி TN 49 BL 1314 என்ற பதிவெண் கொண்ட வோல்ஷ்வேகன் காரை 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் சென்ற காரின் மீது மோதியதில் மனுதாரருக்கு தலை, முகம், தோள்பட்டை, கை, வலது கால், இடுப்பு பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டதாக கூறி மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9.2) மேலும் விபத்தின் காரணமாக மனுதாரர் முதலில் அண்ணாமலை நகரில் உள்ள ராஜா முத்தையா மெடிக்கல் காலேஜ் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்னிட்டு கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையில் மேல்சிகிச்சை அளிக்கப்பட்டதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கு நெற்றி, கண் பகுதியில் காயமும், வலது கால், இடுப்பு, கைகளில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டுள்ளது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.10 ஐ பரிசீலனை செய்யும்போது குறிப்பாக ம.சா.ஆ.10 ஐ பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது தெரியவருகிறது.

9.3) மேலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காவல்துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது 1ம் எதிர்மனுதாரரின் மீது தான் முதல் தகவல் அறிக்கையும், பின்னிட்டு இறுதி அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.5 மாதிரி வரைபடத்தையும், காவல்துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களையும், ம.சா.1ன் சாட்சியத்தையும் பரிசீலனை செய்யும்போது 1ம் எதிர்மனுதாரர் தான் அவருடைய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தினை ஏற்படுத்திவிட்டார் என்பது தெரியவருகின்ற நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தான்

தன்னுடைய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று மேற்கண்ட எழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**10. <u>பிரச்சனை 2 மற்றும் 3–க்கான தீர்வு :–</u>**

10.1) இந்த வழக்கில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு என்று இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்யும் போது, மனுதாரர் பெங்களுரில் உள்ள MVM College of Pharmacy என்ற கல்லூரியில் துணை முதல்வராக பணிபுரிந்தார் என்று அவருடைய சம்பள சான்றிதழ் ம.சா.ஆ.18 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதனைப் பொறுத்து எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. ம.சா.ஆ.18 ஆன சம்பள சான்றிதழை பரிசீலனை செய்யும்போது Gross Earning என்ற வகையில் ரூ.1,10,000/– சம்பளம் பெற்று வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தனியார் கல்லூரியில் பணியாற்றி வந்ததால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று தெரிய வருவதால் மனுதாரர் குறைந்தது ஐந்து மாதத்திற்கு வேலைக்கு சென்றிருக்க வாய்ப்பில்லை என்ற நிலையில் ஐந்து மாதத்திற்கு குறைந்தது ரூ.5,00,000/– சம்பாதித்திருப்பார் என்று முடிவு செய்து ஐந்து மாதத்திற்கு வருமான இழப்பாக ரூ.5,00,000/– மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

10.2) மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான பில்கள் அசல் மற்றும் Duplicate பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அசல் பில்களுக்கான தொகையான ரூ.4,53,750/– மட்டும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும், Duplicate பில்களுக்கான தொகை மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும் ஆம்புலன்ஸ் செலவினமாக ரூ.22,000/–க்கிற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதனைப் பொறுத்து எவ்வித சாட்சியும்

விசாரிக்கப்படாத நிலையில் விபத்தானது சிதம்பரம் புறவெளிச்சாலையில் நடைபெற்ற நிலையில் மனுதாரர் கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் போக்குவரத்து செலவிற்காக ரூ.15,000/– கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

10.3) மேலும் மனுதாரருக்கு நெற்றி, கண் பகுதியில் காயமும், வலது கால், இடுப்பு, கைகளில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டுள்ளது என்றும், அது கொடுங்காயம் என்பதும் காயச்சான்றிதழ் மற்றும் ஊனச்சான்றிதழ் மூலம் தெரியவருவதால் மனுதாரருக்கு ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.20,000/–மும், வலி மற்றும் வேதனைகளுக்காக ரூ.40,000/–மும் கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும் மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ள நிலையில் குறைந்தது ஐந்து மாதங்களுக்கு உதவியாளரின் உதவி தேவைப்பட்டிருக்கும் என்ற நிலையில் ஒருநாள் உதவியாளரின் செலவு ரூ.200/– என்று எடுத்துக்கொண்டால் கூட ஒரு மாதத்திற்கு ரூ.6,000/– வரும் என்ற நிலையில் உதவியாளரின் செலவுத்தொகையாக மாதத்திற்கு ரூ.5,000/– எடுத்துகொண்டு ஐந்து மாதங்களுக்கு ரூ.25,000/– கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

10.4) மேலும் மனுதாரர் Physiotherapy சிகிச்சை எடுத்துக்கொண்டதாக ரூ.3,54,000/–த்திற்கான பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அதனைப் பொறுத்து எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை கருத்திற்கொள்ளும்போது மனுதாரருக்கு ஏற்பட்ட Physiotherapy செலவினமான ரூ.3,54,000/–க்கான பில்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை கருத்திற்கொள்ளும்போது Physiotherapy செலவினமாக ரூ.2,75,000/– ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்ற நிலையில் ரூ.2,75,000/– மனுதாரருக்கு

கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே விபத்து நடந்த தேதியை கருத்திற்கொள்ளும்போது **2005 (1) CTC 38 (MHC) The Managing Director, Tamil Nadu State Transport Corporation Limited Vs S.Rajapriya** என்ற முன்தீர்ப்பில் **When the disability does not result in loss of earning capacity, compensation may be granted on percentage basis instead of applying multiplier method** என்று கண்டுள்ளது. ஆகவே விபத்து நடந்த தேதியை கருத்திற்கொள்ளும்போது 1% க்கு ரூ.7,000/- என எடுத்துக்கொண்டு 39% க்கு ரூ.2,73,000/- கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. ஆகவே

**<u>Calculation Sheet</u>**

| Sl.No. | Under the Head | Calculation |
|---|---|---|
| 1 | For Pain and Sufferings | Rs.40,000/- |
| 2. | For Extra Nourishment | Rs.20,000/- |
| 3. | For Medical Bills | Rs.4,53,750/- |
| 4. | Loss of Income<br>1 Month – Rs.1,00,000/-<br>5 Month – Rs.5,00,000/- | Rs.5,00,000/- |
| 5. | For Disability<br>1% - Rs.7,000/-<br>39% - Rs.2,73,000/- | Rs.2,73,000/- |
| 6. | For Ambulance Charges | Rs.15,000/- |
| 7. | For Attender Charges | Rs.25,000/- |
| 8. | For Physiotherapy Charges | Rs.2,75,000/- |
| | **Total** | **Rs.16,01,750/-** |

எனவே இந்த மனுவில் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை **ரூ.16,01,750/-** அவ்வாறே பிரச்சனை எண்.2 மற்றும் 3 ஐ தீர்மானிக்கிறேன்.

இந்த வழக்கில் 4ம் எதிர்மனுதாரர் மீது எவ்வித கோரிக்கையும் இல்லாத நிலையில் 4ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

"மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் M/s.Cholamandalam MS General Insurance Company Limited., Vs. Ayyanar & others. (2020 (4) CTC 272) என்ற வழக்கில் வழங்கிய உத்தரவின் படி இறுதி உத்தரவு தயார் செய்யப்படாது." என்றும்,

"மேலும் MV Act Section 168(2) மற்றும் விதி 20 (6)ன் படி தரப்பினர்கள் உத்தரவின் நகலை இலவசமாகப் பெறத்தக்கவர்கள்." என்றும் இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

ஆகவே, **முடிவாக,** இம்மனு பகுதியாக செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. மனுதாரருக்கு, 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டு தொகை **ரூ.16,01,750/-**த்தை மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டியுடன் (தள்ளுபடி காலம் நீங்கலாக) இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் Motor Accident Claims Tribunal/Subordinate Judge, State Bank of India. Pollachi Branch Account Number SJPOY1 IFSC Code SBIN0004266 என்ற வங்கி கணக்கில் நேரடியாக வங்கி மாற்றம் மூலம் செலுத்தவேண்டும் என்றும், மேற்படி தொகை மற்றும் மனுதாரரின் செலவுதொகை மற்றும் மொத்தத் தொகைக்கான வட்டி ஆகியவைகள் செலுத்தப்பட்டவுடன் இத்தீர்ப்பாயத்தை அணுகி உரியவங்கி அறிவுறுத்தலைப் பெற்று, மேற்படி மனுதாரருக்கான இழப்பீட்டு தொகை முழுவதையும் மற்றும் அதற்குண்டான வட்டியையும் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது. பற்றாக்குறை நீதிமன்றக் கட்டணம் இருப்பின் 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் செலுத்தத் தவறிய காலத்திற்கு உரிய வட்டியை

இழப்பதோடு, செலுத்தும் வரை இவ்வுத்தரவு நிறைவேற்றுதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. **வழக்கறிஞர் கட்டணம் ரூ.23,017.50 எனவும், நீதிமன்ற கட்டணம் ரூ.15,390/– நிர்ணயம் செய்யப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M MANIKANDAN
Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.12 18:40:02 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்/
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| ம.சா.1 | ராஜேஸ்வரி |

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| குறியீடு | தேதி | ஆவணம் மற்றும் அதன் தன்மை |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 16.09.2020 | முதல் தகவல் அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.2 | – | TN 49 BL 1314 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் பதிவு சான்றிதழ் கணினி நகல் |
| ம.சா.ஆ.3 | – | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் கணினி நகல் |
| ம.சா.ஆ.4 | – | TN 49 BL 1314 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீட்டு பாலிசி கணினி நகல் |
| ம.சா.ஆ.5 | 17.09.2020 | மாதிரி வரைபடம் கணினி நகல் |
| ம.சா.ஆ.6 | 17.09.2020 | பார்வை மகஜர் கணினி நகல் |
| ம.சா.ஆ.7 | – | TN 49 BL 1314 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை கணினி நகல் |
| ம.சா.ஆ.8 | – | TN 49 AE 3912 என்ற பதிவெண் கொண்ட |

| | | |
|---|---|---|
| | | வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை கணினி நகல் |
| ம.சா.ஆ.9 | 16.09.2020 | விபத்து பதிவேடு கணினி நகல் |
| ம.சா.ஆ.10 | – | காயச்சான்றிதழ் கணினி நகல் |
| ம.சா.ஆ.11 | – | TN 49 AE 3912 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீட்டு பாலிசி கணினி நகல் |
| ம.சா.ஆ.12 | 25.12.2020 | இறுதி அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.13 | 18.10.2020 | மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசல் |
| ம.சா.ஆ.14 | – | ரூ.53,977/–க்கான மருத்துவ பில்கள் அசல் |
| ம.சா.ஆ.15 | – | ரூ.11,63,144/–க்கான மருத்துவ பில்கள் அசல் |
| ம.சா.ஆ.16 | 10.04.2023 | மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசல் |
| ம.சா.ஆ.17 | 06.04.2023 | அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் ரிப்போர்ட் அசல் |
| ம.சா.ஆ.18 | – | சம்பள சான்று அசல் |
| ம.சா.ஆ.19 | – | வருமான வரி செலுத்தியதற்கான கணினி நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை**

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் :</u>**

| குறியீடு | தேதி | ஆவணம் மற்றும் அதன் தன்மை |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 09.111.2022 | ஊனச்சான்றிதழ் அசல் |

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.12 18:40:11 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்/
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>FAIR ORDER/ DRAFT ORDER</u>**
MCOP No.69/2021
12.03.2026
Sub Court, Pollachi